[1998 மார்ச் 21

49—

கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் டீசல் விற்பனை நிலையம்

***8686—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் டீசல் விற்பனை நிலையம் (Bunk) பெரணமல்லூரில் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்/இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் / இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஆகியவை அந்தப் பகுதியில் டீசல் விற்பனை நிலையம் அமைக்க விண்ணப்பம் கோரும்பொழுது, பெரணமல்லூர் வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் அதற்கென விண்ணப்பிக்க உள்ளது. அப்போது இம்மையம் மூலம் டீசல் விற்பனை மையம் அமைக்கப் பரிந்துரை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 50, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

50—

பொய்கை ஆற்று நீரை ராதாபுரம் கால்வாய்க்கு வழங்குதல்

***10552—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—